1982 பிப்ரவரி 19]

(ஆ) ஆம் எனில் பழுதுபார்க்கும் பணி எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) குள்ளாசெட்டி அணையை மராமத்து செய்வதற்கான வேலை வறட்சி நிவாரணத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடையும் நிலையில் உள்ளது.

அமராவதி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்,

* வினா எண் 275—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி ஆற்றில் மயில்ரங்கம் அருகே அணைகட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) & (ஆ) இத் திட்டம் முதல்நிலை ஆய்வில் உள்ளது என தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

குதிரை ஆறு அணைக்கட்டும் திட்டம்.

* வினா எண் 276—திரு. ப. நெடுமாறன், திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தாலுகா குதிரை ஆறு அணைக்கட்டும் திட்டம் பற்றிய பரிசீலனை எந்தக் கட்டத்தில் உள்ளது?

(ஆ) அது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகின்றது.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் முழுப்பயனும் மிகவும் பின்தங்கிய வறண்ட பகுதியான பழனிதாலுக்கா, வேடசந்தூர் ஆகிய இரண்டு தாலுக்காக்களுக்கும் கிடைக்கின்ற வகையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினை பழனி வட்டத்திலே உள்ள குதிரை யாற்றின் குறுக்கேதான் கட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். இருந்தாலும் முழு அளவுக்கு என்று சொல்வதை விட தேவையை ஒட்டி அந்தப் பகுதியினுடைய வறண்ட நிலைமையை மனதிலே கொண்டு கொஞ்சம் கூடுதலாக ஏதாவது கிடைப்பதற்கு முயற்சி களைச் செய்ய முடியுமா என்பது பற்றி அரசு நிச்சயமாக ஆலோசிக்கும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்தக் குதிரை யாறுத் திட்டம் என்பது நமது அமைச்சருக்கே தெரியும். நீண்ட நாட்களாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத் திலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம். ஆனால் இவ்வாட்சி வந்ததற்குப் பின்னாலும் இது அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளப் படும் என்று சொல்லி சென்ற ஆண்டு அதற்குத் தொகை ஒதுக்கினார்கள். ஆனால் இந்த ஆண்டிலே அந்த வேலையை எந்தவிதத்திலும் ஆரம்பிக்கவில்லை. இதனால் அந்தப் பகுதி விவசாயிகளிடையே பெரிய அதிர்ச்சி ஏற்படக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த ஆண்டாவது அதைச் செயலாற்று வதற்கு அமைச்சரவர்கள் உத்தரவாதம் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் பயன் விகிதங்களைப் பார்க்கின்றபோது நல்ல திட்டம், ஆகவே இதை எடுத்துச் செய்ய வேண்டும் என்பதிலே எந்தவிதமான சிக்கலும் அரசுக்கு இல்லை. ஆனால் 44.63 ஏக்கர் வன இலாக்காவினுடைய நிலத்தைக் கையகப்படுத்த வேண்டி இருக்கின்றது. புதிதாக அவ்வாறு நாம் கையகப்படுத்து கின்றபோது காடுகளை 'நான் -ஃபாரஸ்ட்' பணிக்கு பயன்படுத்து கின்றபோது மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறவேண்டி இருக்கின்றது. அப்படி ஒப்புதலைப் பெற்றதற்குப் பிறகு நிச்சயமாக அந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு புதிய தகவலைச் சொல் கிறார்கள். வனத்துறையின் நிலங்களைக் கையகப்படுத்தவேண்டும் என்றால் மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவேண்டும் என்று சொல் கிறார்கள். இந்தக் குதிரையாற்றுத் திட்டம் பற்றி ஏற்கெனவே பலமுறை சட்டமன்றத்திலே பதிலளிக்கப்பட்டிருக்கின்றது. அப்போது இந்தமாதிரியான தகவலை மாண்புமிகு அமைச்சரவர் கள் சொல்லவில்லை. சென்ற ஆண்டிலே நானே கேட்டபோது கூட இந்தக் குதிரையாற்றுத் திட்டம் ரொம்ப வேகமாகத்தான் நடக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் முப்போது ஒரு புதிய திட்டத்தைச் சொல்வது பொருத்தமாக இருக்குமா? ஆகவே இது தட்டிக்கழிப்பதற்குச் செய்யப்படுகின்ற இயற்சியா என்பதை அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும், நானே இந்த இடத்திற்கு வந்து அதை எல்லாம் பார்வையிட்டு அதைத் துரிதப் படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டுகிறேன். ஆனால் மத்திய அரசினைப் பொறுத்தவரை காடுகளை 'நான்—ஃபாரஸ்ட் பர்ப்பஸூக்கு' பயன்படுத்தவேண்டும் என்றால் அவர்கள் அனுமதி வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று இது புதிதாக எழுந்துள்ள பிரச்சினைதான். என்றாலும் அதன் காரணமாக இது நிற்காது. இருக்கின்ற தகவலைச் சொல்கிறோம். இது சம்பந்தமாக மதுரை மாவட்ட ஆட்சியாளரின் கருத்தும் பெறப்பட்டது, கோவை மாவட்ட ஆட்சியாளரின் கருத்தும் பெறப்பட்டது. நீர் நிர்வாக அணை யாளரின் கருத்தும் பெறப்பட்டது. எல்லாமே சாதகமாகத்தான் இருக்கின்றன. ஆகவே அனுமதி கிடைத்தவுடன் சீக்கிரமாக இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியும் என்று எழுதி இருக்கிறார்கள். ஆகவே இன்னும் ஒரு மாதம், இரண்டு மாதங் களுக்குள்ளாக அனுமதி கிடைக்கக்கூடும். அனுமதி கிடைத்தவுடன் திட்டத்தை ஆரம்பித்துவிட வேண்டியதுதான். ஆகவே இந்தக் குதிரை நிற்காமல் ஓடும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

வேதாரண்யத்தில் இரசாயனத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 277—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வேதாரண்யத்தில் இரசாயனத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன?

(இ) எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதியில் இயற்கை சமநிலை, தாவர இனங்கள் மற்றும் பறவை இனங்கள் ஆகியவற்றைப் பாதிக்காதபடி எந்தெந்த பகுதிகளில் உப்பு தொழிற்சாலைகள் மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகள் ஆகியவற்றை அமைக்க லாம் என்பது பற்றி பம்பாய் இயற்கை மற்றும் சரித்திர சங்கம் சமீபத்தில் ஓர் அறிக்கை தந்துள்ளது. அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு இது பற்றி விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

இதற்கிடையில் மரவக்காடு வடகாடு பகுதிகளில் சுமார் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உப்பு தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையைத் துவங்கு வதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.